# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் பொருட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராம ஊராட்சிகளில் பல்வேறு மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீரை வீணாக்காமல் பயன்படுத்துதல், நீர் நிலைகளை மாசுபடாமல் பாதுகாத்தல், கோடைமழையின் காரணமாக கிடைக்கும் நீரைச் சேமித்தல், ஆழ்குழாய் கிணறுகளை ஆழப்படுத்துதல், பயன்படுத்தப்படாத திறந்த கிணறுகளைத் தூர்வாரி சுத்தப்படுத்தி பயன்பாட்டுக்குக்கொண்டு வந்து குடிநீர் வழங்குதல் நீண்ட நாட்களைாகப் பயன்படுத்தப்படாத கைப்பம்புகளைப் பழுது நீக்கிப் பயன்படுத்துதல், பொதுக்குழாய்களில் வரும் நீரை மோட்டார்கள் மூலம் திருட்டுத்தனமாக உறிஞ்சுவதைக் கண்காணித்துத் தடுத்தல் போன்ற பல நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி நிறுவனங்களான கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், மாவட்ட ஊராட்சி மூலமாகவும் பல புதிய குடிநீர்த் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மூலம் இராஜாக்கமங்கலம் ஒன்றியத்தில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் 12 பணிகளும், குருந்தன்கோடு ஒன்றியத்தில் ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் 18 பணிகளும், தக்கலை ஓன்றியத்தில் ரூ.23 லட்சம் மதிப்பீட்டில் 7 பணிகளும், திருவட்டார் ஒன்றியத்தில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளும் நடைபெற்று வருகின்றன். வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் மேல்புறம் ஒன்றியத்தில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 14 புதிய சிறுமின்விசைத்திட்டங்கள், 15 ஆழ்குழாய்கள் புனரமைப்பு, மோட்டார்கள் பழுது நீக்கிப்பணிகள் 1, குடிநீர்க் குழாய்கள் நீட்டிப்புப்பணிகள் 5 ஆக மொத்தம் 44 பணிகள் ரூ.99.72 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 12 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. வறட்சி நிவாரணத்திற்காக தமிழக அரசின் பேரிடர் மேலாண்மை நிதிமூலம் பெறப்பட்ட ரூ.5.00 இலட்சத்தில் இரண்டு சிறு மின்விசைத்திட்டங்களும் இதில் அடங்கும்.

இவை தவிர மாநில நிதிக்குழு மானிய நிதியினைப் பயன்படுத்தி மாவட்ட ஊராட்சி மூலம் மாவட்டம் முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகளில் குடிநீர்த்திட்டப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த்திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 27 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் மோட்டார்கள். ஒரு தரைமட்டத்தொட்டி, 2 ஆற்றோர உறிஞ்சு கிணறுகள், 17 குடிநீர்க்குழாய் நீட்டிப்புப்பணிகள் ஆகியவை அடங்கும். வட்டார வாரியாக அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்துக்கு ரூ.13 லட்சம், தோவாளை ரூ.10.5 லட்சம், இராஜாக்கமங்கலம் ரூ.18.5 லட்சம், குருந்தன்கோடு ரூ.14 லட்சம், தக்கலை ரூ.19 லட்சம், திருவட்டார் ரூ.11.5 லட்சம், கிள்ளியூர் ரூ.12.50 லட்சம், முஞ்சிறை ரூ.22.50 லட்சம், மேல்புறம் ரூ.9.90 லட்சம் ஆக மொத்தம் ரூ.1.31 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இப்பணிகள் மூலம் கிராம ஊராட்சிப்பகுதிகளில் வரும் கோடைக்கால வறட்சி மற்றும் குடிநீர்த்தட்டுப்பாட்டை சமாளிக்க மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர மின்மோட்டார்கள் மூலம் குடிநீரை உறிஞ்சு எடுப்பதைக் கண்காணித்து, மோட்டார்களைப் பறிமுதல் செய்யும் பணிக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் மூன்று அலுவலர்களைக் கொண்ட பறக்கும் படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அலுவலர்கள் குடிநீர் தொடர்பான புகார்கள் மீது உடனுக்குடன் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

வறட்சியை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் தங்கள் ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**கன்னியாகுமரி மாவட்டம்,**
**(இ) நாகர்கோவில்**